# தேசியம்

www.thesiyamnews.com

THESIYAM දේසියම්



சிறந்ததில் மிகச்சிறந்தது

OFFSET | DIGITAL | SCREEN PRINTING | CTCP PLATE MAKING | WEDDING CARDS

MATHI COLOURS

NO. 10, MURUGESAR LANE,
NALLUR, JAFFNA.
TEL : 021 222 9285
E-mail : mathicolours@gmail.com

CUSTOMER CARE
+94 77 722 2259



குரல் - 34 | 08.01.2023 (ஞாயிற்றுக்கிழமை) | மார்கழி மாதம் | பக்கங்கள் 6 | ஊக்குவிப்பு : ரூ.30.00


# தமிழ் அரசுக் கட்சி மத்தியகுழுவில் நடந்தது என்ன?




பக்கம் 5


## தமிழ் தேசிய கூட்டமைப்பாக போட்டியிட முடியாது!

## கூட்டமைப்பை பதிவு செய்ய முடியாது!

## ஜனநாயக போராளிகள் கட்சியை அரவணைத்து செல்லுதல்!

## தீர்வு பேச்சில் நம்பிக்கையில்லை..!

# ஒற்றையாட்சிக்குள் தமிழர்களை முடக்கும் நிலைப்பாட்டுக்கு

## தமிழக தலைவர்கள் துணைபோகக் கூடாது கஜேந்திரகுமார் கோரிக்கை!




பக்கம் 5


தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக சந்திப்பானது நேற்று (7) கொக்குவிலில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் இடம் பெற்றது.

ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நேற்றைய தினம் சென்னையிலே மலையக முன்னணியின் ஏற்பாட்டில் தொல் திருமாவளவன் மற்றும் மகேந்திரன் ஆகியோரின் பங்களிப்புடனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுமந்திரன் மற்றும் மலையக முன்னணியின் தலைவர் இராதகிருஸ்ணன்

# ஊசியை நுழைய விட்டால் உலக்கையை விடுவீர்களா? வியாழேந்திரன் ஆவேசம்!




பக்கம் 5


ஊசியை நுழைய விட்டால் உலக்கையை விடுகின்ற கதையை போன்று மட்டக்களப்பில் மக்களின் காணிகள் அபகரிக்கப்படுவதாக வர்த்தக இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் சவுக்கடி பகுதியில் அரச காணிகளை அபகரிக்கும் சம்பவம் தொடர்பான நேற்று நேரடி விஜயம் ஒன்றை மேற்கொண்டு மக்களுடன் கலந்துரையாடியிருந்தார்.

இதன்போது மக்கள் சரமாரியான முறைப்பாடுகளை முன்வைத்துள்ளனர்.

# சுயமரியாதை அற்றவர்களே இன்று தமிழனத்திற்கு தலைவர்கள்

## கலாநிதி க.சிதம்பரநாதன் சாடல்




பக்கம் 5


தமிழீழ விடுதலைப்புலிகளின் காலத்தில் வடக்கிற்குள் உள் நுழைய முடியாதவர்கள் 2009 ஆம் ஆண்டிற்கு பின்னர் வட கிழக்கிற்குள் நுழைந்து அனைத்தையும் விற்று வயிறு வளத்து வருவதாக யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட நுண்கலைத்துறை முன்னாள் தலைவர், கலாநிதி க.சிதம்பரநாதன் விமர்சனம் செய்துள்ளார்.

மாமனிதர் குமார்

# தமிழர்களின் தலையில் 13ஐ திணிக்க சதி! - கஜேந்திரன்




பக்கம் 5


தனிப்பட்டவர்களின் தனிப்பட்ட நலன்களுக்காக அரைகுறை தீர்வுகளை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ள கூடாதென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 23வது நினைவேந்தல் நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு வலியுறுத்தியிருந்தார்.

# தமிழ்க் கூட்டமைப்பின் முன்மொழிவுகள் அடுத்த பேச்சில் சாதகமாகப் பரிசீலனை – பிரதமர்!

தேசியம்
ஆசிரியர் பீடம்
இல.527, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com

# இதுவரை ஒன்றும் நடக்கவில்லை!

திருகோணமலையில் கொல்லப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் ஐவரில் எனது மகன் ரஜீகனும் ஒருவர்.
ஐந்து மாணவர்கள் சார்பிலும் நான் நீதி கேட்கிறேன்.
மாணவர்கள் கொல்லப்பட்டு 7 வருடங்கள் சென்றுவிட்டன.
ஆனால் இதுவரை நீதி இல்லை. (அழுகிறார்)
சட்ட மா அதிபர், பொலிஸ் மா அதிபருக்கு விசாரணை நடத்தப் பணித்துள்ளதாக கூறப்பட்டது.
இதுவரை ஒன்றும் நடக்கவில்லை.
நாங்கள் இலங்கையில் இருந்து கட்டாயமாக வெளியேற வேண்டிய சூழ்நிலை உருவானது.
மனதின் வலி, அழுத்தங்கள் எங்களை மேலும் வாட்டுகின்றன.
இதனால்தான் நீதி கேட்டு மனித உரிமைகள் பேரவையிடம் வந்துள்ளோம். (அழுகிறார்)
சர்வதேச ரீதியான விசாரணை தேவை.
இலங்கை நீதிமன்றங்களில் எனக்கு நம்பிக்கை இல்லை. இதற்கு மேல் என்னால் பேச முடியவில்லை. என்னை மன்னியுங்கள். (மீண்டும் கதறி அழுகின்றார்)
2006 ஆம் ஆண்டு தை மாதம் 2 ஆம் திகதி திருகோணமலை காந்தி சிலையருகில் படுகொலை செய்யப்பட்ட 5 தமிழ் மாணவர்களில் ஒருவரான ரஜீகர் அவர்களின் தந்தையான வைத்தியர் மனோகரன் 2013 ஆம் ஆண்டு மாசி மாதம் 15 ஆம் திகதி மனித உரிமைகள் சபையின் வருடாந்த மீளாய்வுக் கூட்டத்தில் மேற்படி வாக்குமூலத்தை வழங்கி இருந்தார்.
கொலைகள் நடந்த ஆரம்பத்தில் மாணவர்கள் , அரச படைகள் மீது கைக்குண்டு கொண்டு தாக்க முற்பட்ட வேளையில் கைக்குண்டு வெடித்து உயிரிழந்தனர் என இலங்கை அரசாங்கம் அறிவித்து இருந்தது.
ஆனால் மாணவர்கள் மிகக் நெருக்கமாக துப்பாக்கியால் மிக சுட்டுக் கொல்லப்பட்டனர் என்பது இலங்கை சட்ட மருத்துவ பரிசோதனையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது.
மேற்குறித்த தமிழ் மாணவர்கள் கொலை செய்யப்பட முதல் கைது செய்யப்பட்டு மிக கடுமையாக தாக்கபட்ட செய்திகளும் அம்பலப்படுத்தபட்டன
ஆனால் இலங்கை இராணுவ புலனாய்வாளர்க மற்றும் அவர்களால் இயக்கப்பட்ட பிள்ளையான் குழுவினரால் சுகிர்தராஜன் மிக சில நாட்களிலேயே படுகொலை செய்யப்பட்டார்.
ஆனாலும் சர்வதேச ரீதியாக எழுந்த நெருக்கடியை அடித்து படுகொலைகள் நடந்து 7 வருடங்களின் பின்னர் அதாவது 2013 ஆம் ஆண்டு 13 இராணுவ அதிகாரிகள் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு திருகோணமலை நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது .
நல்லாட்சி அரசாங்கம் அதிகாரத்தில் இருந்த 2019 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட அதிரடிப்படையினர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவை 153 மற்றும் 154ஆம் பிரிவுகளின் கீழ் சட்டமா அதிபர் திணைக்களத்தால் சான்றாதாரங்களுடன் முன்வைக்கப்படவில்லை என குறிப்பிடபட்டு விடுதலை செய்யப்பட்டனர்
இன்றுடன் மேற்படி கொடூர கொலைகள் நடந்து 17 ஆண்டுகள் கடந்து விட்டது
பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படவும் இல்லை . நீதி செய்ய வேண்டும் என்கிற விருப்பு கூட ஆட்சியாளர்களுக்கு கிடையாது.

# 13 ஆவது திருத்த சட்டம் முழுமையாக
## அமுல்படுத்தப்பட வேண்டும் என்கின்றார் டக்ளஸ் தேவானந்தா!!



அரசியலமைப்பின் 13ஆவது திருத்த சட்டத்தினை முழுமையாக அமுல்படுத்துவதற்கு உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.
முதற்கட்டமாக ஜனாதிபதியின் நிறைவேற்றதிகாரம், நிர்வாக ஏற்பாடுகளினூடாக காலத்திற்கு காலம் இல்லாமல் செய்யப்பட்ட அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு மீள கையளிக்க வேண்டும் என அவர் கூறியுள்ளார்.
மேலும் காணி விடுவிப்பு மற்றும் அரசியல் கைதிகளின் விடுதலை போன்றவை நல்லெண்ணத்தினை வெளிப்படுத்துவதற்கான முயற்சிகளாக இருக்க வேண்டும் எனவும் கடற்றொழில் அமைச்சர் தெரிவித்துள்ளார்.
தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், அரசியல் அபிலாசைகளுக்கு தீர்வு காணும் வகையில் ஜனாதிபதிக்கும் தமிழ் தரப்புகளுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கலந்துரையாடல்களின் தொடர்ச்சியாக இடம்பெற்ற சந்திப்பு தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்த விடயங்களை குறிப்பிட்டுள்ளார்.
தமிழ் மக்களின் விவகாரங்களை தீர்ப்பதற்கான அமைச்சரவை உப குழுவின் பிரதிநிதி மற்றும் தமிழ் அரசியல் கட்சித் தலைவர் என்ற வகையில், ஜனாதிபதியின் கலந்துரையாடல்களில் இரட்டை வகிபாகத்தினை கொண்டுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, 13 ஆவது திருத்த சட்டத்தினை முழுமையாக அமுல்படுத்துவதில் இருந்து ஆரம்பித்து முன்னோக்கி நகர்வதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை ஈடேற்ற முடியும் எனவும் கூறியுள்ளார்.

# சமஷ்டி அதிகாரப் பகிர்வு வேண்டும்!
## அம்பாறையில் சத்தியாக்கிரக போராட்டம்!




ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு மீளப்பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வினை வலியுறுத்துவதற்கு அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஒரணியில் திரளவேண்டும் என கோரி அம்பாறை மாவட்டம் பாண்டிருப்பு திரௌபதை ஆலய முன்றலில் நேற்று பொது மக்கள் சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டனர்.
வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் வடகிழக்கில் 8 மாவட்டங்களிலும் தமிழ் அரசியல் கட்சிகளை ஒன்று படுமாறு வலியுறுத்தி கடந்த 5 திகதி தொடக்கம் எதிர்வரும் 10 ஆம் திகதிவரையிலான தொடர் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்ததையடுத்து இன்று மக்கள் ஒன்று திரண்டு குறித்த சத்தியாகிரக போராட்டத்தை முன்னெடுத்தனர்.
இதன் போது வடக்கு கிழக்கு சிறுபான்மை மக்களுக்கான அரசியல் தீர்வு பேச்சுவார்த்தையில் சிறுபான்மை தமிழ் அரசியல்கட்சிகள் கட்சிகளும் ஓரணியில் திரண்டு ஒரே குரலில் ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு மீளப் பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வினை வலியுறுத்த வேண்டும்.
வடக்கு கிழக்கு மாகாணங்கள் மீள் ஒருங்கிணைக்கப்பட்டு வடக்கு கிழக்கு தனி ஒரு மாகாண அலகாக உருவாக்கப்பட வேண்டும். ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாண அலகின் ஆட்சியானது மக்களால் ஜனநாயகமான தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் சபையால் மேற்கொள்ளப்படவேண்டும்.
இதில் பெண்கள் 50 வீதம் இருப்பது உறுதி செய்யப்படவேண்டும். வடக்கு கிழக்கு மாகாண எல்லைக்கு உட்பட்ட காணிகள் யாவும் மாகாண ஆட்சியின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாக அமையவேண்டும். தற்போது வடகிழக்கில் காணப்படும் இராணுவமயமாக்கல் முற்றிலும் நீக்கப்பட்டு தேசிய பாதுகாப்புக்கான இராணுவம் என்பது 1983களுக்கு முன்னர் இருந்த இடங்களில் மாத்திரம் நிலைநிறுத்தப்பட வேண்டும்.
தமிழ் மக்களின் மத கலாச்சார இடங்கள் தொல் பொருள் பிரதேசம் என அடையாளப்படுத்தப்பட்டு ஆக்கிரமிக்கப்படுவதும் அழிக்கப்படுவதும் உடன் நிறுத்தல் வேண்டும். பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும் என வாசகங்கள் கொண்ட சுலோகங்களுடன் கோஷம் எழுப்பிய வாறு பொதுமக்கள் சத்தியாக்கிரக போராட்டத்தை தொடர்ந்து வருகின்றனர்.

# வடக்கில் புதிய கலாசாரம் தேவை!
## உமா சந்திரா வலியுறுத்து!!!



வடமாகாணத்திலே புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்க வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி செயலாளர் உமா சந்திரா பிரகாஸ் தெரிவித்துள்ளார்.
வவுனியாவில் இடம் பெற்ற உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்கள் அறிமுக நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே உமா சந்திரா பிரகாஸ் இவ்வாறு தெரிவித்திருந்தார்.
பெண்களுக்கான இட ஒதுக்கீடு 25 சதவீதம் மாத்திரமல்ல அது பேச்சளவிலேயே அது உருவாக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.
இளைஞர்களுக்கான அங்கீகாரம் கிடைக்கவேண்டும் என வும் புத்திஜீவிகள் அதிகமாக அரசியலுக்குள் உள்வாங்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

# சென்னையில் விக்கி, சுமா, இராதா
## எம்.பிக்கள் ஒரே மேடையில்!!




உலகத் தமிழ் வம்சாவளி மாநாடு சென்னை - நந்தம்பாக்கத்தில் உள்ள வர்த்தக மையத்தில் நேற்று ஆரம்பமானது.
இதில் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.வி.விக்னேஸ்வரன், எம்.ஏ.சுமந்திரன், வி.இராதாகிருஷ்ணன், மலேசிய தொழில் முனைவோர் மற்றும் கூட்டுறவுத் துறை துணை அமைச்சர் சரஸ்வதி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு விசேட உரையாற்றினர்.
இந்த மாநாட்டில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவனுக்கு "தென்னாட்டு அண்ணல் விருது" வழங்கப்பட்டது.
இலங்கை எம்.பிக்களான விக்னேஸ்வரன், சுமந்திரன், இராதாகிருஷ்ணன் ஆகியோர் ஒன்றுசேர்ந்து திருமாவளவனுக்கு விருது வழங்கிக் கௌரவித்தனர்.

# கிழக்கினை மீட்கப்போகின்றோம் என கூறி காணி அபகரிக்கும் செயற்பாடுகள் முன்னெடுப்பு

## ஞா.சிறிநேசன் குற்றச்சாட்டு!



கிழக்கினை மீட்கப்போகின்றோம் என்று கூறிக் கொண்டு இன்று மண் அகழும் செயற்பாடும் காணி அபகரிப்பு செயற்பாடுகள் மட்டுமே முன்னெடுக்கப் படுவதாக மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்தார்.

மட்டு.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அரசாங்க அதிகாரிகள் இவ்வாறானவர்கள் மேற்கொள்ளும் காணி அபகரிப்புக்களை தடுத்து நிறுத்த முடியாதவர்களாகவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

இந்நிலையில் மின்சக்திக்குப் பொறுப்பான அமைச்சர் காஞ்சன விஜயசேகர மின்கட்டணத்தை உடனடியாக அதிகரித்தேயாக வேண்டும். இல்லாவிட்டால், மக்கள் ஆடு, மாடுகள் போல் இருட்டில் வாழப் பழகிக் கொள்ள வேண்டுமெனக் கூறுகிறார். இதனை மறுபுறமாக நோக்கினால் செலவை அதிகரிக்கக் கூடிய விதத்தில் 12 புதிய அமைச்சுக்களை நியமிப்பதற்காக அரசாங்கம் துடித்துக் கொண்டிருக்கிறது. அதேபோன்று 6 ஆளுநர்களை நியமிப்பதற்கான செயற்பாடும் முன்னெடுக்கப் படுகிறது. இப்போது பார்க்கின்றபோது மக்கள் வறுமையில் தள்ளாடுகின்ற நிலையில் அவர்களுக்கு மானியம் கொடுப்பதா? நிவாரணம் கொடுப்பதா? என்று சிந்திக்க வேண்டிய அரசாங்கம் மேலும் மேலும் வரிச்சுமைகளை அதிகரிப்பதன் மூலமாக மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதிக்கின்ற செயற்பாடு போன்று இந்தச் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றது.

குறிப்பாகச் சொல்லப் போனால் இரண்டே இரண்டு வருடங்களில் பாரிய பொருளாதார நெருக்கடியை இந்த அரசு ஏற்படுத்தியிருக்கின்றது. இந்நிலையில் வெங்காய இறக்குமதியின் போது அவர்கள் கிலோ ஒன்றுக்கான 50 ரூபா வரியினை 25 சதவீதமாகக் குறைத்ததன் காரணமாக அரசுக்கு 1600 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நஷ்டம் என்பது மக்களையே பாதித்திருக்கிறது.

அதேபோன்று செல்வந்தர்கள் மீதான வரியினைக் குறைத்ததன் மூலமாக 60 ஆயிரம் கோடி ரூபா வரை அரசுக்கு இழப்பு ஏற்பட்டிருக்கின்றது. இதனடிப்படையில் வெங்காயம், வெள்ளைப்பூடு, எண்ணெய் இறக்குமதி என்று எல்லாப் பக்கத்திலும் அரசுக்குக் கிடைக்க வேண்டிய வருமானத்தை, மக்களுக்கு வழங்க வேண்டிய மானியத்தை இல்லாமல் செய்து விட்டனர். இன்று மின்கட்டணத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறார்கள்.

அதாவது வரவில்லாமல் மக்கள் திண்டாடுகின்ற போது, மக்கள் மீது வரிச்சுமையினைச் சுமத்துகின்ற செயற்பாடு என்பது மக்கள் மயமான அரசு என்பதை விடுத்து, இது அதிகார வர்க்கத்தின் ஆட்சி என்ற அடிப்படையில் தான் செயற்படுவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

12 அமைச்சுக்களை இப்போது அதிகரிக்க வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் இங்கிருக்கின்ற அமைச்சை எடுத்துக் கொண்டால், மட்டக்களப்பைப் பொறுத்தமட்டில் 1 இலட்சம் கிலோ மீட்டர் வீதியமைக்கின்ற செயற்பாட்டில் கொமிசன்கள் வாங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இது விடயத்தில் உரிய விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும். இதில் 45 கோடி ரூபாய் வரை தரகுப் பணம் பெறப்பட்டதாக குற்றச் சாட்டுக்கள் உள்ளது.

இந்நிலையில் மக்களுக்குச் செலவு செய்யப்பட வேண்டிய பணம் வீணடிக்கப்பட்டிருக்கிறது. அத்தோடு அபிவிருத்தி என்பது பலவீனமாக்கப்படுகின்ற நிலையும் காணப்படுகின்றது. எனவே அரசு இந்தப் 12 அமைச்சுக்களையும் நியமிப்பதை விடுத்து, மக்களுக்கு மானியம் மற்றும் நிவாரணம் கொடுக்கின்ற செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். ஏனென்றால் அரசின் செயற்பாடுகள் காரணமாகத்தான் இந்தப் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதே ஒழிய, மக்களின் செயற்பாடுகள் காரணமாக இந்தப் பொருளாதார நெருக்கடி ஏற்படவில்லை. இந்நிலையில் மின்கட்டணத்தை அதிகரிக்கக் கூடாது எனப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தலைவர் கூறிக் கொண்டிருக்கிறார். அமைச்சர் அதிகரிக்க வேண்டுமென்கிறார்.

இவ்வாறான சூழ்நிலையில் நாங்கள் மக்கள் பக்கமாக நின்று சிந்திக்கின்ற போது உழைப்பு இல்லை. வருமானம் இல்லை. கிட்டதட்ட 65 இலட்சம் மக்கள் உணவுப் பாதுகாப்பு இல்லாத நிலையில் வாழ்வதாக ஐக்கிய நாடுகள் சபை அறிக்கை வாயிலாகத் தெரிவித்திருக்கின்றது.

தற்போது நியமிக்கப்படும் ஆளுநர்கள் கூட ஐக்கிய தேசியக் கட்சியைப் பலப்படுத்தவே செய்யப்படுவதாக நாங்கள் கருதுகிறோம். விரைவில் நடைபெறவுள்ள தேர்தலின் போது தம்மை வெற்றி பெறச் செய்யும் பிரச்சாரப் பீரங்கிகளாகப் பயன்படுத்தப் போகிறார்களோ தெரியவில்லை.

எனவே இவ்வாறான விடயங்கள் தேவைதானா? என மக்களும் நாங்களும் சிந்திக்கிறோம்.

இன்றைய காலகட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தை எடுத்துப் பார்த்தால் கடந்த திங்கட்கிழமை காந்தி சதுக்கத்தில் ஓர் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றிருக்கிறது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கைக்குழந்தைகளோடு தாய்மார் கலந்துகொண்டிருக்கிறார்கள்.

மண்முனை– வடக்குப் பிரதேசம் காணித் தட்டுப்பாடு உடைய பகுதியாகும். மக்களுக்குத் தேவையான காணிகளை வழங்குவதிலே சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்ற பிரதேசத்திலிருந்து இங்கிருக்கின்ற அரசியல் அதிகாரம் பெற்ற அமைச்சர்கள் காணிகளை அபகரிப்பதாக அவர்கள் தமது ஆர்ப்பாட்டத்தின் வாயிலாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

இப்போது கிழக்கை மீட்கின்ற செயற்பாடு எனச் சொல்லிக் கொண்டு மண் அகழ்கின்ற செயற்பாடுகளும், காணிகளை அபகரிக்கின்ற செயற்பாடுகளும் தான் அதிகமாக நடந்து கொண்டிருக்கிறது.

எனவே அரச தரப்பில் இருக்கின்ற நிருவாகிகள் இவற்றைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் காணப்படுகிறார்களா? என்ற கேள்வி எழுகின்றது.

மக்களுக்குச் சேர வேண்டிய காணிகள் தனிப்பட்ட அதிகாரக் குவிப்பில் இருக்கின்றவர்களுக்கு வழங்கப்படுவதென்பது மக்களை ஏமாற்றித் தாங்கள் பலன்களை அடைந்து கொள்கின்ற ஒரு செயற்பாடாகவே உள்ளது.அன்றைய காலகட்டத்தில் மண் என்பது பாரிய வாகனங்கள் மூலமாக ஏற்றப்பட்டுக் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டது. தற்போது புகைவண்டி மூலம் மண்வளம் சூறையாடப்படுகின்றது. இந்நிலையில் கிழக்கை மீட்பதென்பது காணிகளை அபகரித்துக் கொண்டு மண் வியாபாரம் செய்யும் செயற்பாடுதானா? என்று கேட்க வேண்டியிருக்கின்றது. மாவடி ஓடை, புளுட்டுமான்ஓடை, மண்முனை – வடக்குப் பிரதேசம், கிரான் பிரதேச செயலகம், ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச செயலகம் போன்ற இடங்களில் காணப்படுகின்ற காணிகள் அபகரிக்கப்படுவதாக மக்கள் கூறிக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் மக்களை ஏமாற்றி நீங்கள் செய்த அரசியல் போதும். அதற்குரிய பதில்களை வழங்குவதற்கு மக்கள் தயாராக இருக்கிறார்கள் என்றார்.

# முல்லைத்தீவு வள்ளிபுனம் பகுதியில் வடக்கு கிழக்கு

## ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் கவனயீர்ப்பு போராட்டம்!!!

முல்லைத்தீவு வள்ளிபுனம் பகுதியில் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

நேற்று (சனிக்கிழமை) முல்லைத்தீவு வள்ளிபுனம் மாலை நேர கல்வி நிலையத்திற்கு முன்பாக இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை இங்கு இடம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் உரிமைகளை நிலைநாட்டுவதற்காக தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைத்ததோடு ஜனாதிபதியுடன் இடம்பெறுகின்ற பேச்சுவார்த்தைகளில் அனைத்து




தமிழ் உரிமைக்காக பாடுபடும் கட்சிகளின் கருத்துக்களை உள்வாங்கி செயற்படவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் 50இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் மக்கள் மாற்றம் ஒன்றை எதிர்பார்க்கின்றனர்

## மைத்திரி குணரத்ன!

ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி உள்ளூராட்சி சபைத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் வாழைப்பழச் சீப்பு சின்னத்தில் தனித்துப் போட்டியிட தீர்மானித்துள்ளது.

நேற்று (சனிக்கிழமை) ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் செயலாளர், சட்டத்தரணி மைத்திரி குணரத்ன யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து கட்சி நிலைமைகள் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இதனை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உள்ளிட்ட சிலரே யாழ்ப்பாணத்தில் இதுவரை காலமும் செயற்பட்டனர் ஆனால் மக்கள் மாற்றம் ஒன்றை எதிர்பார்த்துள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கை முழுவதும் தனித்துப் போட்டியிட்டு வெற்றி பெறுவோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கிளிநொச்சியில் கடலட்டை பண்ணையாளர்களுக்கு

## டக்ளஸ் தேவானந்தாவினால் அனுமதி பத்திரம் வழங்கி வைப்பு!!



கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட வேரவில் இளவங்குடா கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்க மண்டபத்தில் 83 கடலட்டை பண்ணையாளர்களிற்கு அனுமதிப் பத்திரம் வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் நேற்று (07. 01.2022) இந்த கடலட்டை பண்ணையாளர்களிற்கு அனுமதிப் பத்திரம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், பூநகரி பிரதேச செயலாளர் அகிலன், பூநகரி பிரதேச செயலக மற்றும் கடற்தொழில் நீரியல்வள திணைக்கள உத்தியோகத்தர்கள், பயனாளிகள், கடற்தொழிலாளர்கள் என பலர் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுனாமியில் இறந்தவர்களுக்கு மக்களின் அஞ்சலிக்காக

## நினைவாலயம் திறப்பு!!



சுனாமி ஆழிப்பேரலையில் காவுகொள்ளப்பட்ட மக்களின் நினைவாக நினைவாலயம் அமைக்கப்பட்டு மக்களின் அஞ்சலிக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வத்திராயன் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் பொது மக்களின் நிதிப் பங்களிப்பில் குறித்தி சுனாமி நினைவாலயம் அமைக்கப்பட்டு நேற்று முன்தினம் மக்கள் வணக்கத்திற்காக திறந்து வைக்கப்பட்டது.

இதன் போது ஆறு உறவுகளை இழந்த குடும்பத்தினர் பொதுச் சுடரை ஏற்றி வைத்து நினைவேந்தலை ஆரம்பித்து வைத்தனர்.

## சூடுபிடிக்கும் யாழ்.மாநகர சபை விவகாரம்

# தொங்குசபை ஆட்சி வேண்டாம்!

## மாநகர சபை உறுப்பினர் கணேசராஜா




தொங்கு சபையிலுள்ள யாழ் மாநகர சபையின் புதிய முதல்வர் பதவியினை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் யாழ் மாநகரசபை உறுப்பினர் கணேசராஜா தெரிவித்துள்ளார்.

தமக்கு ஆதரவாக மூன்று உறுப்பினர்கள் உள்ளதாகவும் எனவே தொங்கு சபையில் பதவிகளை பெற்று,

அதனை கொண்டு நடத்த முடியாது என்றும் இதற்கு முன்னாள் முதல்வர் வி.மணி வண்ணன் சிறந்த உதாரணம் என கணேச ராஜா மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மணிவன்னனண் தன்னிச்சையாக தாமே முதல்வர் பதவியில் இருந்து விலகுவதாக தெரிவித்திருப்பது ஒரு ஏமாற்று நாடகம்.

மாநகர சபையின் கட்டளை சட்டத்தின் படி பாதீடு இரண்டு முறை தோற்கும் பட்சத்தில் முதல்வர் பதவி இழக்கப்படும் என்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்.மாநகரசபை உறுப்பினர் குறிப்பிட்டுள்ளார்.

# உள்ளூராட்சி சபை தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது தொடர்பில்

## வி.மணிவண்ணன் தலைமையில் கலந்துரையாடல்!



யாழ்.மாநகர முன்னாள் முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தலைமையிலான அணியினர் உள்ளூராட்சி சபை தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பாக ஆராய்ந்துள்ளனர்.

வெள்ளிக்கிழமை யாழ். சேர் பொன் இராமநாதன் வீதியில் உள்ள அலுவலகத்தில் குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றிருந்த்து.

இதன்போது உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்பாளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் உளளூராட்சி சபைத் தேர்தலை எதிர்கொள்வது எவ்வாறு என்பது தொடர்பாக ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கலந்துரையாடலில் அக்கட்சியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், கட்சி செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காங்கேசன்துறை அபிவிருத்தி நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் - வடக்கு ஆளுநர் உறுதி!

காங்கேசன் துறைமுக கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக துறைமுக கட்டுமானங்களை விரைவாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வடமாக ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

நேற்று சனிக்கிழமை வட மாகாண ஆளுநர் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற கப்பல் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சின் செயலாளர் அடங்கிய குழுவினருடன் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காங்கேசன்துறை முகத்தை அபிவிருத்தி செய்வதற்காக அமைச்சு மட்டத்தில் சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வந்த அமைச்சின் செயலாளர் மற்றும் சுங்கத் திணைகள் அதிகாரிகள் காங்கேசன் துறை முகத்திற்கு சென்று நிலைமைகளை பார்வையிட்ட பின்பு என்னோடு கலந்துரையாடினர்.

காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி பணிகளில் வடக்கு மாகாண சபை எவ்வாறான உதவிகளை மேற்கொள்ள வேண்டும் என்பது தொடர்பில் விரிவாக கலந்துரையாடினோம்.

இறங்குதுறை மற்றும் சுங்கப் பகுதி கட்டுமானங்களை ஆரம்பிப்பது தொடர்பில் கப்பல் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சின் செயலாளர் ரூவான் சந்திர தலைமையிலான குழுவினர் வடமாகாண ஆளுநருக்கு தெளிவு படுத்தினர்.

முதற்கட்டமாக இறங்குதுறை மற்றும் சுங்கத் திணைக்கள கட்டுமானங்களை மேற்கொள்வது தொடர்பில் ஆராய்ந்ததுடன் எதிர்வரும் மாதங்களில் குறித்த திட்டத்தினை ஆரம்பிப்பது தொடர்பில் ஆலோசனை முன்வைக்கப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார்.



# தமிழ் தேசிய மக்கள் முன்னணி, விடுதலைப்புலிகளின் கட்டமைப்பை போன்றது! சிலர் விமர்சிக்கின்றனர்..!

## நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிப்பு!!

இறுக்கமான கட்டமைப்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் காணப்பட்டதன் காரணமாகவே அவர்கள் அழிந்து போனதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்ததாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 23வது நினைவேந்தல் நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

அத்துடன் தமிழ் தேசிய மக்கள் முன்னணி மீதும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுவதாகவும் விடுதலைப்புலிகளின் கட்டமைப்பை போன்று தமது அமைப்பு இறுக்கமான நிலைப்பாட்டினை கொண்டுள்ளதாக குற்றம் சுமத்தப்படுவதாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறிப்பிட்டிருந்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அவருடைய கடைசி காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட பல அரசியல் ஆய்வாளர்கள் பாதுகாப்பு நிலைமைகளை ஆய்வு செய்கின்ற முக்கிய நபர்கள் ஆகியோர் பலர் அவருக்கு உயிர் ஆபத்து இருப்பதாக கூறியிருந்தார்கள். பலர் அவரை இந்த நாட்டைவிட்டு தற்காலிகமாக வெளியே வரச்சொல்லி கேட்டார்கள், நான் இந்த வருடத்தினை தாண்ட மாட்டேன் என்று கூறியிருந்தார். ஆனால் அவருடைய பாதையிலிருந்து அவர் மாறவில்லை.

எங்களுடைய அமைப்பினை பொறுத்தவரை தமிழ்தேசிய மக்கள் முன்னணி உருவாகிய போது அந்தப் பண்புகளை உடைய ஒரு அமைப்பாக செய்யப்படவேண்டும் என்ற ஆழமான ஒரு புரிதலோடு தான் உருவாகியது.

இன்றைக்கு எங்களுடைய அமைப்பை பற்றி பேசுகின்ற பொழுது எங்களிடம் விமர்சிக்கின்ற கோணத்தில் முன்வைக்கின்ற கருத்துக்கள் இறுக்கமான விட்டுக்கொடுப்பு இல்லாத மக்களின் ஆதரவை பெற முடியாது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் இறுக்கமாக இருந்து, அதனால் தான் அழிந்து போனது. நீங்களும் அப்படித்தான் இறுதியில் அழிந்து போவீர்கள் என்பது தான் வழமையாக சொல்லும் கருத்து.

எங்களுடைய அமைப்பினை பொறுத்தவரையிலே மாமனிதர் குமார் பொன்னம்பலம் இந்த அமைப்புக்கு தலைமை தாங்கி இருந்தால் அப்படிப்பட்ட கருத்துக்களுக்கு சொல்லி இருக்கக்கூடிய பதில் நாங்கள் தோற்பதற்கு தயாராக இருக்கின்றோம் என்பதாகும் சிதம்பரநாதன் கூறிய வார்த்தை, அவரது பார்வை தமிழினம் சம்பந்தமாக சாதாரண மக்கள் சம்பந்தமாக மக்கள் போராட்டம் சம்மந்தமாக இன்றைக்கு நடைபெறுகின்ற அரசியல் என்ற பெயரில் நடைபெறுகின்ற மோசடிகள், இனவிப்புக்கள், துரோகங்கள் இதுபற்றி அவர் வைத்திருக்கின்ற பார்வையோடு எங்களுக்கு எந்தவிதமான கூச்சமில்லாமல் அதை முழுமையாக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஓரிடத்தில் இருக்கின்றோம். - என்றார்.



## தமிழரசுக் கட்சி மத்தியக்...

தமிழ் தேசிய கூட்டமைப்பில் புதிய கட்சிகளை இணைக்கக்கூடாது. தேவையென்றால், பிரிந்து சென்றவர்கள் முன்னர் எந்த கட்சியில் இருந்தார்களோ, அந்தக் கட்சியில் இணைந்து கொள்ளலாம் என இலங்கை தமிழ் அரசு கட்சியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் மத்தியகுழு கூட்டம் நேற்று நடைபெற்றது. இதன்போது, பேசப்பட்ட முக்கிய விடயங்களின் சுருக்கம் வருமாறு–

கட்சியின் முன்னாள் செயலாளர் கி.துரைராசசிங்கம் தனக்கு விடுதலைப் புலிகள் ஒரு தகவல் தெரிவித்தார்கள் என்றும், இப்பொழுது கூட்டமைப்பிலிருக்கும் சிலரை இணைக்கக்கூடாதென அப்போது தெரிவித்திருந்தார்கள் என்றும் புதுக்குண்டு வெடிக்க வைத்தார்.

அப்போது, மத்தியகுழுவிலிருந்தவர்களிற்கு பொருத்தமான அறிவுரையை சட்டத்தரணி கே.வி.தவராசா வழங்கினார்.

“இது சாதாரண உள்ளூராட்சி தேர்தல். இந்த தேர்தலின் மூலம் அரசுக்கோ, சர்வதேசத்திற்கோ செய்தி சொல்வதென்று இல்லை. இப்படியான நிலைமையில் பிரிந்து போட்டியிட்டால், இதற்கடுத்த தீர்மானம் மிக்க தேர்தல்களில் கூட்டமைப்பு பிளவடையும். ஆகவே சுயநலமாக சிந்திக்காமல் இனத்தின் நலனின் அடிப்படையில் சிந்திக்க வேண்டுமென்றார்.

எனினும், அதனை மற்றையவர்கள் ஆதரிக்கவில்லை.

இலங்கை தமிழ் அரசு கட்சி தனித்து போட்டியிட்டால், ஏனைய இரண்டு கட்சிகளும் தமிழ் தேசிய கூட்டமைப்பாக போட்டியிடும் என அறிவித்தனர், ஆனால் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பெயரை பாவித்து தேர்தலில் போட்டியிட முடியாது என எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வீட்டு சின்னத்துடன், தமிழ் தேசிய கூட்டமைப்பின் பெயர் தேர்தல்கள் திணைக்களத்தில் பதிவாகியுள்ளது. அதனை மற்றைய பங்காளிகள் பயன்படுத்த முடியாது என்றார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பில் புதிய கட்சிகளை இணைத்து, தமிழ் தேசிய கூட்டமைப்பை பதிவு செய்ய வேண்டுமென ரெலோ, புளொட் தலைவர்கள், இரா.சம்பந்தனிற்கு கடிதம் அனுப்பியிருந்தனர்.

இது குறித்தும் ஆராயப்பட்டது.

தமிழ் தேசிய கூட்டமைப்பை பதிவு செய்ய முடியாது என மத்தியகுழுவில் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், புதிய கட்சிகளை இணைத்துக் கொள்ளக்கூடாது என்றும் தெரிவிக்கப்பட்டது. தேவையெனில், விலகிச் சென்றவர்கள், அவர்கள் முதல் எந்த கட்சியிலிருந்து சென்றார்களோ, அந்தக்கட்சியில் இணைந்து கொள்ளலாம். உதாரணமாக, விக்னேஸ்வரன் தமிழ் அரசு கட்சியிலும், சிவாஜிலிங்கம் தரப்பினர் ரெலோவிலும் இணைந்து கொள்ளலாம் என்றனர்.

இந்த வில்லங்கத்தனமாக கருத்தை சொன்னவர், முன்னாள் யாழ் முதல்வர் ஆர்னோல்ட். ஈ.பி.ஆர்.எல்.எவ் பற்றி பின்னர் ஆராயலாம் என கூறப்பட்டது.

ஜனநாயகப் போராளிகள் கட்சியினரையும் அரவணைத்துச் செல்ல வேண்டுமென வடக்கு அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார். இது குறித்து கருத்துப் பரிமாறப்படவில்லை. ஜனநாயக போராளிகள் கட்சியினர் இப்பொழுது இலங்கை தமிழ் அரசு கட்சியின் “சின்ன வீடு“ பாணியிலேயே செயற்படுகிறார்கள். உத்தியோகபூர்வ பங்காளிகளாக இணைக்கப்படவில்லை. தமிழ் அரசு கட்சியின் வேட்பாளர் பட்டியலில் ஓரிரண்டு இடங்கள் வழங்கப்பட்டு வருகிறது. இதேவிதமான பாத்திரமே அடுத்த உள்ளூராட்சி தேர்தலிலும் நீடிக்கும்.

பேச்சில் அரசாங்கத்துடன் நடக்கும் பேச்சில் தமக்கு நம்பிக்கையில்லையென எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். பிரதமர் தினேஸ் குணவர்த்தன பேச்சுக்களிற்கு வந்து வாய்திறக்காமல் இருப்பதை சுட்டிக்காட்டி, பெரமுனவின் நகர்வில் சந்தேகம் தெரிவித்தார்.

## ஒற்றையாட்சிக்குள் தமிழர்...

பத்திரிகையாளர் சந்திப்பில் பங்கேற்றனர்.

இந்நிலையில் இந்தியாவால் கொண்டுவரப் பட்ட 13வது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தக் கோரிய பத்திரிகையாளர் சந்திப்பாக அது காணப்பட்டது. அவர்கள் அனைவரும் அந்த சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போது 13 ம் திருத்தச் சட்டம் தமிழ்மக்களுக்குரிய தீர்வு அல்ல என வலியுறுத்தினர்.

எம்மைப் பொறுத்தவரை சுமந்திரனின் இக் கருத்து ஆச்சரியமல்ல. சுமந்திரன் திட்டமிட்டு தமிழ்த் தேசிய அரசியலுக்குள் கொண்டுவரப்பட்டவர். ஆனால் திருமாவளவன் மகேந்திரன் போன்றவர்கள் ஈழப்போராட்டத்தின் போது ஈழத்தமிழர்களுக்காக உறுதியாக குரல்கொடுத்தவர்கள். போராட்ட காலத்திற்கு முன்னர் இவர்கள் இருவரின் வாயால் கூட 13 ம் திருத்தச்சட்டமும் மாகாண சபை முறைமையும் தீர்வு என்று உச்சரித்ததை நான் அறியவில்லை.

அந்தவகையில் அவர்கள் இந்த 13 ம் திருத்தச்சட்டத்தை மத்திய அரசை கோரும் கருத்தானது. எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கின்றது. மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகர் சந்திரசேகரன் ஐயா ஈழப் போராட்டத்தை மிகவும் நேசித்தவர். அவர்களின் கட்சியினரும் தனித்துவமாக ஈழத் தமிழர்களுக்காக செயற்பட்டவர். அப்படிப்பட்ட கட்சியில் இருந்து வந்த இராதாகிருஸ்ணன் 13ம் திருத்தச்சட்டத்தை அமுல்படுத்த வலியுறுத்தும் செயற்பாடானது வெறுப்புக்குரியது.

இந்தியாவின் மத்திய அரசு 13 ம் திருத்தச்சட்டம் தமிழர்களுக்கு இறுதி தீர்வு என்ற நிலை இன்று வரை தொடர்கின்றது. இன விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த விடுதலைப்புலிகள் 13ம் திருத்தச்சட்டத்தை தீர்வுக்கான ஒரு ஆரம்பப்புள்ளியாகக் கூட கருத மறுத்தனர். அதனால் தான் 30 வருடம் போராட்டம் நடைபெற்றது. அவ்வாறு இருக்கையில் அதனை ஆரம்பப் புள்ளியாகக் கருதினால் தமிழர் தரப்பு ஒற்றையாட்சிக்குள் முடங்கி விடும்.

இதுவரைக்கும் தமிழர் சரித்திரத்திலே ஒற்றையாட்சி முறை கொண்டு வந்த நிலையில் தமிழர் தரப்பு நிராகரித்ததாலேயே இன்றுவரை இலங்கையில் இனப்பிரச்சினை காணப்படுகின்றது. 13 ஐ ஆரம்பப்புள்ளியாக வலியுறுத்தும் தமிழர் தலைவர்கள் என கூறுபவர்கள் அரசின் அடிமையாக செயற்பட்டாலும் இன்று தமிழர் போராட்டத்திற்கு பக்கபலமாக செயலாற்றிய தமிழகத் தலைவர்கள் இன்று நிலை மாறியுள்ளனர்.

தமிழக தலைவர்கள் இன்றுதான் தமிழர் விடயத்தில் மிகவும் அவதானமாக செயற்படும் காலகட்டமாக உள்ளது. அதிலும் திருமாவளவன், மகேந்திரன் போன்றோர் இவ்வாறு செயற்படுவது தமிழர்களின் விடயத்தில் ஏமாற்றமளிக்கிறது. அவர்களிடம் கெஞ்சிக் கேட்கின்றோம்இ ஒற்றையாட்சிக்குள் முடக்கும் 13ம் திருத்தச்சட்டத்திற்கு ஆதரவளிக்காது கடந்த 35 வருடமாக தமிழர் நலன் சார்பில் எவ்வாறு செயற்பட்டீர்களோ அந்த நிலையில் உறுதியாக இருக்க வேண்டும்.

புலம்பெயர் தேசத்தில் வாழும் உறவுகள் எவ்வாறு தமிழர் தரப்பின் மீது கரிசனையுடன் உள்ளனரோ அதுபோலவே தமிழக தலைவர்களும் செயற்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றோம். மாறாக 13ஐ வலியுறுத்த முற்படும் போது தமிழர்களின் அபிலாசைகளை மத்திய அரசின் ஒற்றையாட்சி முறைக்குள் உள்ளடக்குவதற்கு சோரம் போவதாக அமையும். தமிழகத் தலைமைகளுக்கு போராட்ட காலத்தை விட தற்சமயம் உரிமைசார் விடயங்களில் பேரம் பேசக்கூடிய ஆற்றல் அதிகரித்துள்ளது. எனவே போராட்ட காலத்தை விட தமிழர்களுக்கு உங்களின் ஆதரவை பன்மடங்காக வழங்க வேண்டும்.

தயவு செய்து நாங்கள் தமிழக தலைமைகளிடம் கேட்டுக்கொள்வது ஒற்றையாட்சிக்குள் தமிழர்களை முடக்கும் நிலைப்பாட்டுக்கு துணை போகாது ஈழத்தமிழர் நலன் சார் விடயத்தில் ஆக்கபூர்வமாக இருக்க வேண்டும்.

கடந்த கிழமை ஐக்கிய நாடுகள் சபையின் துணை செயளாளர் நாயகம் விக்னராஜா அம்மையார் இலங்கைக்கு விஜயம் செய்தார் அதன் போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் விக்னேஸ்வரனின் சந்திப்பை மையப்படுத்தி ஜனாதிபதி ரணில். விக்கிரமசிங்க இன நல்லிணக்கம் இலங்கையில் காணப்படுகின்றது என வெளிநாடுகளுக்கு எடுத்து காட்டியுள்ளார் இவ்வாறு இருக்கையில் ஜனாதிபதியுடனான சந்திப்பில் முன்னேற்றமில்லை என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளர் சுமந்திரன் கூறுவது தமிழ் மக்களை ஏமாற்றும் செயற்பாடாகும் என்றார்.

## ஊசியை நுழைய விட்டால்...

அப்பிரதேசத்திலுள்ள காணிகளை தனியார் காணி என கூறி அபகரிப்பவர்களிடம் விபரங்களை கேட்டு பிரச்சினை தொடர்பில் வியாழேந்திரன் ஆராய்திருந்தார். இந்த காணி அபகரிக்கும் மோசடியின் பின்னணியில் அரசியல் உள்ளதாகவும் வர்த்தக இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பகுதியில் சில அரசியல்வாதிகளுக்கு 5 ஏக்கர் காணிகள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் மக்களிடம் தெரிவித்திருந்தார்.

இதேவேளை நேற்றையதினம் ஊடக சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்திருந்த தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன்,

மட்டக்களப்பில் அமைச்சர் ஒருவர் காணி அபகரிப்பு மற்றும் மண் அகழ்வில் ஈடுபட்டு வருவதாகவும் குற்றம் சுமத்தியிருந்தார். அரசாங்கத்துடன் இணைந்துள்ள அரசியல்வாதிகள் காணி அபகரிப்பில் ஈடுபட்டு வருவதாகவும் குற்றம் சுமத்தியிருந்த நிலையில் இன்று வர்த்தக இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் இன்று சவுக்கடி பகுதி மக்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## தமிழர்களின் தலையில்....

அத்துடன் ஒற்றையாட்சியை அங்கீகரிப்பதற்கு எடுக்கப்படுகின்ற சதி முயற்சிகளை தமிழ் மக்களின் நலனில் அக்கறை கொண்டவர்கள் அம்பலப்படுத்த வேண்டும் என்றும் கஜேந்திரன் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

## தமிழ்க் கூட்டமைப்பின் முன்...

“இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துள்ள முன்மொழிவுகள் அடுத்த சர்வகட்சிக் கூட்டத்தில் சாதகமாகப் பரிசீலிக்கப்படும். சர்வகட்சிப் பேச்சு சரியான திசையை நோக்கியே சென்று கொண்டிருக்கின்றது.”

– இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் தொடர்பில் இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அதிருப்தியை வெளியிட்டுள்ளமை தொடர்பில் ஊடகங்களிடம் பிரதமர் கருத்துரைக்கும் போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

”சர்வகட்சிக் கூட்டம் கடந்த மாதம் நடைபெற்றது. அந்த முதலாவது அமர்வில் தமிழ் மக்களுக்குத் தீர்வொன்றை வழங்க வேண்டும் என்பதில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் உடன்பட்டுள்ளனர். இதன் தொடர்ச்சியாக அடுத்த சர்வகட்சிப் பேச்சு எதிர்வரும் 10, 11, 12ஆம் திகதிகளில் இடம் பெறவுள்ளன.

இந்த இரண்டாம்கட்டப் பேச்சுக்கு முன்னர் ஒரு முன்னேற்பாடாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் ஜனாதிபதி பேச்சு நடத்தியுள்ளார். உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் தொடர்பிலும் இதர விடயங்கள் தொடர்பிலும் அவர்களிடம் முன்மொழிவுகள் கோரப்பட்டுள்ளன.

இந்த முன்மொழிவுகளுக்கு அமைய அடுத்த சர்வகட்சிக் கூட்டத்தில் கலந்துரையாடல்கள் இடம் பெறும். அதன்போது கூட்டமைப்பினரின் முன்மொழிவுகள் சாதகமாகப் பரிசீலிக்கப்படும். ஆதலால், கூட்டமைப்பினரின் தற்போதைய அதிருப்தி நிலையை ஏற்க முடியாது. ஏனெனில், சர்வகட்சிக் கூட்டமானது அதன் சரியான திசையை நோக்கியே சென்று கொண்டிருக்கின்றது” என்றார்.

## சுயமரியாதை அற்றவர்களே..

பொன்னம்பலத்தின் 23வது நினைவேந்தல் நிகழ்வில் நிகழ்வில் கலந்துகொண்டு நினைவுப் பேருரையினை ஆற்றியபோதே அவர் இவ்வாறு விமர்சித்திருந்தார்.

அத்துடன் தமிழ் மக்களின் தலைவர்கள் சுயமரியாதையுடன் செயற்பட்டால் மாத்திரமே தமிழ் மக்களுக்கான தீர்வு கிடைக்கும் என்றும் மாறாக சுயமரியாதையை இழந்து எதனையும் விற்று வயிறு வளர்பவர்களாளேயே தமிழ் மக்களுக்கு இன்று இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

2009 ஆம் ஆண்டு வரையும் புலிகள் மக்கள் பிரதிநிதிகள் இல்லை என கூறினார்கள், புலிகள் பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விடுகிறார்கள் என கூறினார்கள், இன்று இரண்டுமில்லை. மக்களிடம் விடுதலை புலிகள் தொடர்பாக விருப்பமுள்ளது.

மக்களின் நியாயமான அபிலாசைகள் கவனிக்கப்பட வேண்டும். இன்று தமிழர் பகுதிக்குள் நுழைந்த சிலர் 2009க்கு முன் இந்த மண்ணை மிதித்து இருக்க முடியாது.

ரணில் இன்று செய்வது சிங்கள நாடு என்ற ரீதியில் என்ன செய்யலாம் என்பது. ஆனால் சுமந்திரன் போன்றோர் எதையும் ஏற்று கொள்வோம் என்ற மனநிலையில் உள்ளனர் எனவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

இன்று நடந்து கொண்டு இருப்பது பேச்சு வார்த்தை அல்ல. பேச்சு வார்த்தை என்பது இரண்டு இனங்களின் தலைமையும் இரண்டு இனங்களின் விருப்பங்களை வைத்து கதைப்பது.

இப்பொழுது நடப்பது அவர்களின் விருப்பங்களுக்கு ஏற்றவாறு நடந்து கொள்ளவது தான் இதை தான் சுமந்திரன் செய்கின்றார். எனவும் மேலும் குறிப்பிட்டிருந்தார்.





# அமேசானில் காடழிப்பு 150 சதவீதம் அதிகரிப்பு!

உலகின் நுரையிரல் என கூறப்படும் 'அமேசான் மழைக்காடு', முந்தைய ஆண்டை விட டிசம்பரில் 150 சதவீதம் அழிக்கப்பட்டுள்ளதாக புதிய அறிக்கை தெரிவிக்கின்றது.

தீவிர வலதுசாரி முன்னாள் ஜனாதிபதி ஜெய்ர் போல்சனாரோ தனது கடைசி மாதத்தில் பதவியில் இருந்தபோது இறுதி இருண்ட அறிக்கையை வழங்கினார்.

தேசிய விண்வெளி முகவரகத்தின் டிடெட்டர் கண்காணிப்பு திட்டத்தின் அறிக்கையின் படி, கடந்த மாதம் உலகின் மிகப்பெரிய மழைக்காடுகளில் பிரேஸிலின் பங்கில் 218.4 சதுர கிலோமீட்டர் (84.3 சதுர மைல்) காடுகள் அழிக்கப்பட்டதை செயற்கைக்கோள் கண்காணிப்பு கண்டறிந்துள்ளது.

மேலும், டிசம்பர் 2021இல் அழிக்கப்பட்ட 87.2 சதுர கிலோமீட்டர் (33.7 சதுர மைல்கள்) இலிருந்து 150 சதவீதத்திற்கும் மேலாக பரப்பளவு அதிகரித்துள்ளது.

இதுதவிர, பிரேஸிலிய அமேசானில் சராசரி வருடாந்திர காடழிப்பு முந்தைய தசாப்தத்தை விட 75.5 சதவீதம் அதிகரித்துள்ளது.

ஜனவரி 1ஆம் திகதி ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வாவால் போல்சனாரோ, வெளியேற்றப்பட்டார்.

இந்நிலையில், 'போல்சனாரோவின் அரசாங்கம் முடிவடைந்திருக்கலாம், ஆனால் அவரது துயரமான சுற்றுச்சூழல் மரபு இன்னும் நீண்ட காலத்திற்கு உணரப்படும்' என்று சுற்றுச்சூழல் குழக்களின் கூட்டணியான காலநிலை கண்காணிப்பு அமைப்பின் நிர்வாக செயலாளர் மார்சியோ அஸ்ட்ரினி ஒரு அறிக்கையில் தெரிவித்தார்.

# பணிபகிஷ்கரிப்பில் ஈடுபட தயாராகும் வேல்ஸ் ஆம்புலன்ஸ் தொழிலாளர்கள்!



கடந்த ஆண்டு தொழில்துறை நடவடிக்கைக்கு வாக்களித்த பின்னர் ஜனவரி 19 மற்றும் 23ஆம் திகதிகளில் பணிபகிஷ்கரிப்பில் ஈடுபட வேல்ஸ் ஆம்புலன்ஸ் தொழிலாளர்கள் தயாராகிவருகின்றனர்.

சுமார் 1,000 துணை மருத்துவர்கள், மருத்துவ தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் அழைப்பு கையாளும் ஊழியர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கிலாந்தின் ஐந்து பகுதிகளில் உள்ள ஆம்புலன்ஸ் ஊழியர்கள் ஜனவரி 11 மற்றும் 23 திகதிகளில் மேலும் இரண்டு வேலைநிறுத்தங்களை அறிவித்ததை அடுத்து இது வந்துள்ளது.

தற்செயல் திட்டங்களில் ஆம்புலன்ஸ் சேவை மற்றும் சுகாதார சபைகளுடன் இணைந்து செயற்படுவதாக வேல்ஸ் அரசாங்கம் கூறியது.

வேல்ஸில் உள்ள உறுப்பினர்கள் தொழில்துறை நடவடிக்கைக்கு 88 சதவீதம் வாக்களித்தனர் மற்றும் இரண்டு 24 மணி நேர வேலைநிறுத்தங்களுக்குத் தயாராக உள்ளனர்.

ஆனால் யுனைட் யூனியன் அவசரகால உதவிகளுக்கு பாதுகாப்பை அளிக்க ஒப்புக்கொள்கிறது.

# நீண்ட இழுபறிக்கு பிறகு குடியரசுக் கட்சியின் கெவின் மெக்கார்த்தி அமெரிக்க நாடாளுமன்ற சபாநாயகராகத் தேர்வு!



நீண்ட இழுபறிக்கு பிறகு குடியரசுக் கட்சியின் கெவின் மெக்கார்த்தி அமெரிக்க நாடாளுமன்ற சபாநாயகராகத் தேர்வுசெய்யப்பட்டுள்ளார்.

பெரும்பான்மையைப் பெற்றிருந்தாலும் இறுதியாக 15 சுற்று வாக்குப்பதிவுக்குப் பிறகு அவர் அமெரிக்க நாடாளுமன்ற சபாநாயகராகத் தேர்வுசெய்யப்பட்டார்.

வெள்ளிக்கிழமை பிற்பகுதியில் பதிவான 428 வாக்குகளில் 216 வாக்குகளைப் பெற்று அவர் வெற்றிபெற்றார். ஜனநாயகக் கட்சியின் ஹக்கீம் ஜெப்ரிஸ் 212 வாக்குகளைப் பெற்றார்.

மெக்கார்த்தி இறுதியாக சபாநாயகர் நாற்காலிக்கு ஏறியவுடன், சபை இறுதியாக புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமியற்றுபவர்களுக்கு சத்தியப்பிரமாணம் செய்யத் தொடங்கும் மற்றும் 2023-24 அமர்வு தொடங்கும்.

ஒரு நூற்றாண்டில் ஒரு சபாநாயகர் முதல் சுற்றில் தேர்ந்தெடுக்கப்படாதது இதுவே முதல் முறை.

கலிபோர்னியாவைச் சேர்ந்த மெக்கார்த்தி, மூத்த சட்டமன்ற உறுப்பினர் நான்சி பெலோசிக்குப் பதிலாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை, நியூயோர்க் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஜெஃப்ரிஸ், புதிய காங்கிரஸில் ஹவுஸ் மைனாரிட்டி தலைவராக பணியாற்றுவார்.

# வேலைநிறுத்தப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர இரயில் ஓட்டுநர்களுக்கு ஊதிய உயர்வு!




வேலைநிறுத்தப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியில் ரயில் நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பு, ரயில் ஓட்டுநர்களுக்கு தொடர்ச்சியாக இரண்டு ஆண்டுகளுக்கு 4 சதவீதம் ஊதிய உயர்வு வழங்கியுள்ளது.

ரயில் விநியோகக்க குழுமம், பல வேலைநிறுத்தங்களுக்குப் பிறகு ரயில் ஓட்டுநர்களுக்கான தொழிற்சங்கமான அஸ்லெஃபுக்கு தனது முதல் வாய்ப்பை வழங்கியுள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் 2022இல் 4 சதவீத ஊதிய உயர்வு மற்றும் இந்த ஆண்டு 4 சதவீத அதிகரிப்பு ஆகியவை அடங்கும், ஆனால் இது பணி நடைமுறைகளில் மாற்றங்களைச் சார்ந்துள்ளது.

15 ரயில் நிறுவனங்களின் ஓட்டுநர்கள் வியாழக்கிழமை வெளிநடப்பு செய்ததை அடுத்து, சில ஓட்டுநர்கள் எந்த இரயில்களையும் இயக்க முடியாமல் போனதை அடுத்து, வெள்ளிக்கிழமை நண்பகல் அஸ்லெஃபுக்கு தனது சலுகையை அனுப்பியதாக ரயில் விநியோகக்க குழுமம கூறியது.

இரயில் கடல்சார் மற்றும் போக்குவரத்து தொழிலாளர்களின் தேசிய தொழிற்சங்கத்தில் உள்ள காவலர்கள் மற்றும் சிக்னல் ஊழியர்கள் போன்ற மற்ற இரயில் தொழிலாளர்கள் வெள்ளியன்று தொடர்ச்சியான பெரிய அளவிலான வேலைநிறுத்தங்களைத் தொடர்ந்ததால் ஓட்டுநர்களின் இந்த நடவடிக்கை வந்துள்ளது.

ரயில்வே அமைச்சர், தொழில்துறை பிரதிநிதிகள் மற்றும் தொழிற்சங்க தலைவர்களுக்கு இடையிலான சந்திப்பு திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

# போர்நிறுத்தத்தை மீறி உக்ரைன் துப்பாக்கி சூடு நடத்தியதாக ரஷ்யா குற்றச்சாட்டு!



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினால் அழைப்பு விடுக்கப்பட்ட ஒருதலைப்பட்ச போர்நிறுத்தம் மீறப்பட்டதாக கூறப்படுகின்றது.

உக்ரைனிய தரப்பில் ஒரு மீட்புப் பணியாளர் ரஷ்ய தாக்குதலில் உயிரிழந்ததாகவும் அதே நேரத்தில் டொனெட்ஸ்க் நகரம் பாதிக்கப்பட்டதாக ரஷ்யாவும் தெரிவித்துள்ளது.

ஆர்த்தடாக்ஸ் கிறிஸ்மஸுடன் இணைந்து 36 மணி நேர ஒருதலைப்பட்ச போர்நிறுத்தத்திற்கு ரஷ்யா உத்தரவிட்டது. ஆனால், துருப்புக்களை வலுப்படுத்த ரஷ்யா திட்டமிடுவதாக கூறி இதை உக்ரைன் நிராகரித்தது.

ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சகம் வெள்ளிக்கிழமை மாஸ்கோ நேரப்படி 12:00 மணிக்கு தொடங்கி, முழு போர் நிறுத்தத்தை கடைபிடிப்பதாக வலியுறுத்தியது.

போர்நிறுத்தத்தின் போது உக்ரைனிய இராணுவம், ரஷ்ய நிலைகளைத் தாக்கியபோது மட்டுமே அதன் படைகள் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக அது கூறியது.

போர்நிறுத்தம் தொடங்கிய சிறிது நேரத்திலேயே உக்ரைன் முழுவதும் வான்வழி எச்சரிக்கைகள் அறிவிக்கப்பட்டன, பின்னர் கெர்சன் பிராந்தியத்தின் ஆளுனர், தீயணைப்பு நிலையத்தின் மீது ஒரு தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அதில் ஒருவர் உயிரிழந்ததோடு மேலும் நான்கு பேர் காயமடைந்ததாகவும் கூறினார்.

கிழக்கு நகரமான கிராமடோர்ஸ்க் தாக்குதலுக்கு உள்ளானது மற்றும் ஒரு டசன் கட்டங்கள் சேதமடைந்துள்ளதாக உக்ரைனிய அதிகாரிகள் தெரிவித்தனர்

லுஹான்ஸ்க் பிராந்தியத் தலைவர், ரஷ்யாவின் கிறிஸ்மஸ் போர்நிறுத்தம் ஒரு பொய் மற்றும் ஒரு பொறி' என்று எச்சரித்தார்,

ரஷ்யர்கள் பயங்கரவாதத் தாக்குதல்களை திட்டமிடலாம் என்பதால், ஆர்த்தடாக்ஸ் சர்ச் சேவைகளில் கலந்து கொள்ளவோ அல்லது நெரிசலான இடங்களில் கூடவோ வேண்டாம் என்று குடியிருப்பாளர்களுக்கு அறிவுறுத்தினார்.

# எல் சாப்போவின் மகனை கைது செய்யும் நடவடிக்கையில் 29 பேர் உயிரிழப்பு!



மெக்ஸிகன் போதைப்பொருள் மன்னன் எல் சாப்போவின் மகனைக் கைது செய்வதற்கான நடவடிக்கையின் போது குறைந்தது 29பேர் உயிரிழந்ததாக மெக்ஸிகோ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

32 வயதான ஒவிடியோ குஸ்மான்-லோபஸ், குலியாகனில் கைது செய்யப்பட்டார். ஆனால், அவர் கைது செய்யப்பட்ட போதும் அதற்குப் பின்னரும் 10 படையினரும் 19 சந்தேக நபர்களும் கொல்லப்பட்டனர்.

ஓவிடியோ குஸ்மான்-லோபஸ் கைது செய்யப்பட்டதால், ஆத்திரமடைந்த அவர் கும்பல் உறுப்பினர்கள் வீதித் தடுப்புகளை அமைத்து, டசன் கணக்கான வாகனங்களுக்கு தீ வைத்தனர் மற்றும் உள்ளூர் விமான நிலையத்தில் விமானங்களைத் தாக்கினர்.

மேலும் 35 இராணுவ வீரர்கள் காயமடைந்தனர் மற்றும் 21 ஆயுததாரிகள் கைது செய்யப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சர் லூயிஸ் கிரெசென்சியோ சாண்டோவல் தெரிவித்தார்.

'தி மவுஸ்' என்ற புனைப்பெயர் கொண்ட குஸ்மான்-லோபஸ், ஹெலிகொப்டர் மூலம் அதிக பட்ச பாதுகாப்புடன் ஃபெடரல் சிறைக்கு கொண்டு செல்லப்பட்டார். உலகின் மிகப்பெரிய போதைப்பொருள் கடத்தல் அமைப்புகளில் ஒன்றான தனது தந்தையின் மோசமான சினலோவா கார்டெல்லின் ஒரு பிரிவை வழிநடத்தியதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

# மன்னாரில் காற்றில் பறந்த சஜித்தின் வாக்குறுதிகள்!



தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் கடந்தகால அரசாங்கத்தின் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சராக இருந்தபோது யுத்தத்தால் பாதிக்கப்பட்டு வீடிழந்தவர்கள் மற்றும் புதிதாக திருமணமானவர்களுக்கான வீட்டுத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இதன் காரணமாக பயனாளிகள் தாம் அதுவரை வசித்த குடிசைகளை அகற்றிவிட்டு, புதிய வீடுகளை அமைப்பதில் ஆர்வம் காட்டிவந்தனர்.

அதன்பின்னர் அரசாங்கம் மாற்றமடைந்ததை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுவந்த வீட்டுத்திட்டங்கள் மற்றும் கட்டுமானப் பணிகளை புதிய அரசாங்கம் இடைநிறுத்தியது.

அதனால் வசித்துவந்த குடிசைகளையும் அகற்றிவிட்டு, புதிய வீட்டுக்கான கட்டுமானப் பணிகளையும் நிறைவு செய்ய முடியாத நிலையில் பல குடம்பங்கள் அவல நிலைக்கு தள்ளப்பட்டன.

இந்நிலையில் வீடின்றி தவிக்கும் அந்த மக்களின் துயர நிலையே இன்றும் தொடர்கிறது. இவ்வாறான சூழ்நிலையையே தாமும் எதிர்கொள்வதாக மன்னார் மாவட்டம், நானாட்டான் , மடுக்கரை முள்ளிமோட்டை கிராமத்தில் வசிக்கும் பெண்ணொருவர் தெரிவித்துள்ளார்.

பாடசாலைக்கு செல்லும் நான்கு பிள்ளைகள் மற்றும் ஒரு கைக்குழந்தையுடன் அந்த பெண் குடம்பத்தை நடத்தி வருகிறார். வீட்டுத்திட்டத்தை நம்பி, வசித்துவந்த குடிசையையும் இழந்து, வாழ்வதற்கு தகுந்த இடமின்றி அவதிப்படுவதாக அவர் வேதனை வெளியிட்டுள்ளார்.

புதிய வீட்டை நம்பி, தற்காலிகமாக அமைத்திருந்த குடிசையும் பழுதடைந்துள்ளமையால் அதில் வசிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதனால் வெயில், மழைக் காலங்களில் குழந்தைகளோடு வசிக்க கடினமான நிலை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

குடும்பத் தலைவன் கூலி வேலைக்குச் சென்று வந்தாலும், நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் குடிசையையேனும் திருத்தியமைக்க முடியாதுள்ளது என்றும் அவர் வேதனை வெளியிட்டுள்ளார் .

## மட்டு ஓட்டுமாவடியில் வீடு உடைத்து

### 44 அரை தங்க ஆபரணங்களை திருடிய இருவர் கைது!!



மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள ஓட்டுமாவடி பிரதேசத்தில் வீடு உடைத்து 44 அரை பவுண் தங்க நகைகளை கொள்ளையிட்ட இருவரை வெள்ளிக்கிழமை கைது செய்ததுடன் கொள்ளையிடப்பட்ட தங்க ஆபரணங்கள் மோட்டர் சைக்கிள் ஒன்றை மீட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த பண்டார தெரிவித்தார்.

ஓட்டுமாவடி பிரதேசத்திலுள்ள ஆசிரியர்களான கணவன் மனைவி கடந்த 3 ம் திகதி காலையில் வீட்டை பூட்டிவிட்டு பாடசாலைக்கு சென்று வீடு திரும்பியபோது வீட்டின் கூரையை உடைத்து வீட்டுக்குள் இறங்கிஅங்கு அறையில் அலுமாரியில் இருந்த 44 அரை தங்க ஆபரணங்கள் திருடப்பட்டிருந்தன.

இதனையடுத்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டையடுத்து பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் கொஸ்தாப்பர் எஸ்.எம். வை.தினேஸ் க்கு கிடைத்த தகவல் ஒன்றின் பிரகாரம் பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஜி.ஜி. குமாரசிறி கருணாரத்தின தலைமையிலான பொலிஸ் கொஸ்தாப்பர் 68968 எம்.ஜி.நிரோசன் ஜானக, 71739 டி.ஆர்.பி.விக்கிரமசேன, 8656 எஸ்.எம். வை.தினேஸ், 93663 பி.வி.எஸ்.வி. அமரசேகர, ஆகியேர் கொண்ட பொலிஸ் குழுவினர்.

சம்பவதினமான நேற்று காலை திருடர்களின் வீடுகளான மீராவேடை, வாழைச்சேனை ஆகிய இரு வீடுகளையம் சுற்றிவளைத்து 39, 34 வயதுடைய இருவரையும் கைது செய்ததுடன் திருடப்பட்ட தங்க ஆபரணங்களையும் திருட்டுக்குப் பயன்படுத்திய மோட்டர்சைக்கிள் ஒன்றையும் மீட்டனர்.

இதில் கைது செய்யப்பட்டவர்களை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## ஜெர்மனி நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர்

### அருணி வேலழகன் கல்முனையில் செயலமர்வு.



ஜெர்மனியின் பிரபல நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி டாக்டர் அருணி வேலழகன் கல்முனை ஆதார வைத்திய சாலையில் நரம்பியல் உபாதை தொடர்பான செயலமர்வில் வளவாளராக கலந்து கொண்டார்.

கல்முனை ஆதார வைத்தியசாலையில் கடந்த ( 05.01.2023 - 06.01.2023) இரண்டு நாட்கள் நரம்பியல் உபாதை நோயாளர் முகாமைத்துவம் சம்பந்தமான செயலமர்வு இடம் பெற்றது.

இந்நிகழ்வில் வளவாளராக ஜெர்மனியின் பிரபல நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி டாக்டர் அருணி வேலழகன் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வு வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா முரளீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வைத்தியசாலையின் வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், மற்றும் ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் போது நரம்பியல் உபாதை ஏற்படும் காரணங்கள், இந்நிலைமைகள் ஏற்படாமல் எவ்வாறு தடுத்துக் கொள்ளலாம், இந்நிலை ஏற்பட்டால் எவ்வாறு பராமரிப்பு வழங்க வேண்டும், என்னென்ன விடயங்களில் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதை மிகவும் இலகுவான எளிமையான நடைமுறையில் அனைவருக்கும் விளங்கக் கூடிய விதத்தில் னுச.அருணி வேலழகன் ( நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணர் ) அவர்களினால் விளக்கங்கள் மற்றும் செயன்முறைப்பயிற்சிகளும் வழங்கப்பட்டது.

இச்செயல் முறை விளக்கம் மிகுந்த பிரயோசனமாகவும் அவசியமாகவும் இருந்ததாக கலந்து கொண்டோர் கூறினர்.



# வரலாற்றில் காணாமல் போகும் ஒரு சைவத் தமிழ்க் கிராமம்! அம்பாறையில் இருந்து ஒளிந்துள்ள மர்மங்கள்!!!



அம்பாறை மாவட்டத்தின் வரலாற்றில் இருந்து மறைந்து போகும் ஒரு சைவத் தமிழ்க் கிராமம் தொடர்பில் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அவரி பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

சமீபத்தில் மட்டக்களப்பின் சமூக ஆர்வலரும், வரலாற்றுப் பட்டதாரியுமான வை.சத்தியமாறன் இணையதளம் ஒன்றில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள புராதன சிவன் ஆலயம் ஒன்றின் புகைப் படங்களைப் பிரசுரித்து அவ்வாலயம் தமிழர்களால் பாதுகாக்கப்படவேண்டும் என்ற தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

அப்புகைப்படங்களில் இருந்து அது ஒரு புராதன ஆலயமாக இருக்கலாம் என்பதை கிழக்குப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் எஸ். சிவகணேசனிடம் எடுத்துக் கூறிய போது அவ்விடத்தில் ஆய்வு செய்வதற்கான சகல ஏற்பாடுகளையும் அவர் மேற்கொண்டிருந்தார்.

அவரின் முயற்சிக்கு பல்கலைக்கழக துணைவேந்தர், கலைப்பீடாதிபதி ஆகியோர் வழங்கிய ஆதரவும், உதவிகளும் ஆய்வுக் குழுவினரைப் பெரிதும் உற்சாகப்படுத்தியது.



இந்த ஆய்வுக்குழுவில் வரலாற்றுத் துறை தலைவர் எஸ். சிவகணேசன், மற்றும் விரிவுரையாளர் செல்வி கிறிஸ்ரினா நிரோசினி, ஊடகவியலாளர் வை.சத்தியமாறன் ஆகியோருடன் கிழக்குப் பல்கலைக்கழக சமூகவியல்துறைத் தலைவர் கலாநிதி தில்லைநாதனும் இணைந்து கொண்டமை ஆலயம் அமைந்துள்ள வட்டாரத்தின், சமூக நிலமைகளை அறிந்து கொள்ளப் பெரிதும் உதவியது.

இந்த ஆலயம் அம்பாறை மாவட்டத்தில் தீகவாபி, குடுவில் ஆகிய வட்டாரங்களை உள்ளடக்கிய ஆலங்குளம் என்ற இடத்தில் அமைந்துள்ளது.

இவ்வட்டாரத்தில் புழக்கத்தில் இருந்து வரும் பல இடப்பெயர்கள் பண்டுதொட்டு இங்கு தமிழர்கள் வாழ்ந்து வந்ததன் அடையாளங்களாகக் காணப்படுகின்றன. ஆயினும் தற்போது இங்கு ஒரு தமிழ்க் குடியிருப்பைத் தானும் காணமுடியவில்லை.

இந்நிலையில் ஆலயத்தைச் சுற்றாடலில் பரந்த அளவில் வாழ்ந்து வரும் ஏனைய இன மக்கள் தமிழர்கள் இங்கு வாழவில்லை எனவும், அவர்கள் கரும்புத் தோட்டங்களில் வேலைசெய்வதற்காக இங்கு வந்த போது அவர்களின் வழிபாட்டிற்காகவே முன்பொரு காலத்தில் கட்டப்பட்ட ஆலயமே தற்போது அழிவடைந்த நிலையில் காணப்படுகிறது என அவர்கள் எம்மிடம் கூறிய புதக்கதை எமக்கு அதிர்ச்சியான செய்தியாக இருந்தது.

ஏனெனில் இற்றைக்கு ஐந்து சகாப்தங்களுக்கு முன்னரே குடுவில் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டுக்களை ஆய்வு செய்த பேராசிரியர் பரணவிதான அக்கல்வெட்டுக்களில் ஒன்றை ஆதாரமாகக் காட்டி இற்றைக்கு 2200 ஆண்டுகளுக்கு முன்னரே இவ்விடத்தில் வாழ்ந்த “திஸ” என்ற தமிழ்ப் பெண்ணின் தலைமையில் தமிழ் வணிகர்கள் ஒன்று சேர்ந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டதை உறுதிப்படுத்தி இருந்தார்.

பேராசிரியர் இந்திரபாலா இலங்கையில் 2300 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர்கள் மொழியால் ஒரு இனக்குழுவாக வாழத் தொடங்கியதற்கு இக்கல்வெட்டையும் முக்கிய ஆதாரமாகக் காட்டுகின்றார்.

அண்மையில் கிழக்கிலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வில் எழுத்துப் பொறித்த மட்பாண்டச் சாசனங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட இச்சாசனங்கள் தமிழ் மொழியில் தமிழ் வரிவடிவத்தில் எழுதப்பட்டுள்ளன. அவற்றுள் நாகன், ணாகன், தம்பன், வண்ணக்கன் முதலான பெயர்கள் பொறித்த சாசனங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.

இச்சாசனங்கள் பற்றி பேராசிரியர் பத்மநாதன் அண்மையில் வெளியிடப்பட்ட நூல் ஒன்றில் விரிவாக ஆராய்ந்துள்ளார்.

இவ்வகையான மட்பாண்டச் சாசனங்கள் தமிழகத்தை அடுத்து கிழக்கிலங்கையிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை கிழக்கிலங்கைத் தமிழரின் பூர்வீக வரலாற்றுக்கு புதுவெளிச்சமூட்டுவதாக உள்ளது.

தொல்லியல் அறிஞர்கள் தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு பெருங்கற்காலப் பண்பாடு என்ற புதிய நாகரிகத்தை அறிமுகப்படுத்தியவர்கள் நாக இன மக்கள் எனக் கூறுகின்றனர்.

இப்பண்பாட்டு மக்கள் கிழக்கிலங்கையில் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் பல இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் அப்பண்பாட்டு மக்கள் பயன்படுத்திய மட்பாண்டங்களில் நாகன், ணாகன் முதலான பெயர்கள் இடம்பெற்றிருப்பது கிழக்கிலங்கையில் வாழ்ந்த பூர்வீக தமிழர்கள் நாக இனக் குழுவைச் சேர்ந்தவர்கள் என்பதை மேலும் உறுதி செய்வதாக உள்ளது.



இவ்வரலாற்றுப் பின்னணியிலேயே அம்பாறை ஆலங்குள ஆலயத்தின் தோற்றத்திற்கான காரணங்களை நோக்குவது பொருத்தமாகும். நீண்ட காலத்திற்கு முன்னரே ஆலங்கேணியில் வாழ்ந்த தமிழர்கள் இவ்வாலயத்தைக் கைவிட்டதன் காரணமாக தற்போது இவ்வாலயம் பெருமளவுக்கு அழிவடைந்து ஆலமரங்களுக்கு மத்தியில் வழிபடப்பட முடியாத ஆபத்தைத் தரும் வெறும் கட்டிடமாகக் காணப்படுகின்றது.





ஆலயத்திற்கு உள்ளேயும், வெளியேயும் வளர்ந்துள்ள பெரிய ஆலமரங்களின் கிளைகளும், வேர்களும் ஆலயச் சுவர்கள் சிலவற்றிற்கு பாதுகாப்பு அரண்களாக உள்ளன.

இவ்வாலயம் சிறிய விமானத்துடன் கூடிய கர்ப்பக்கிரகம், அந்தராளம், முன்மண்டபம், பலிபீடம், கொடிக்கம்பம் என்பவற்றைக் கொண்டு கட்டப்பட்டதை ஆய்வுக் குழுவினரால் அடையாளப்படுத்த முடிந்தது.

நீண்டகால வரலாற்றைக் கொண்டிருக்கும் இவ்வாலயம் பிற்காலத்தில் சீமெந்து கொண்டு மீள் உருவாக்கம் செய்யப்பட்டதை ஆலயத்தின் கட்டிட வடிவங்களும் விமானத்தின் கலை வடிவங்களும் உறுதி செய்கின்றன.

ஆயினும் இவ்வாலயம் மிகத் தொன்மையானதென்பதை ஆலயத்திற்கு உள்ளேயும், வெளியேயும் புதையுண்டு காணப்படும் பெருமளவு செங்கற்கள் உறுதிசெய்கின்றன.



அதிலும் கற்பக்கிரகம், அந்தராளம் என்பவற்றின் உட்பாகங்கள் முழுக்க செங்கற்களால் கட்டப்பட்டவையாகக் காணப்படுகின்றன. செங்கற்கள் கொண்டு கட்டப்பட்ட அந்தராளத்தின் முன்பக்கச் சுவர் சீமேந்து கொண்டு பூசப்பட்ட நிலையில் செங்கற் சுவர் தெளிவாகக் காணப்படுகிறது.

இந்த வேறுபாடுகளைக் கொண்டு செங்கற்களால் கட்டப்பட்ட கர்பக்கிரகம், அந்தராளம் ஆலயத்தின் தொடக்ககால நிலையில் அதன் வெளிப்புறம் மட்டும் பிற்காலத்தில் சீமேந்து கொண்டு மீள் உருவாகம் செய்யப்பட்டதாகவும், முன் மண்டபம், பலிபீடம் முதலான கட்டிடங்கள் ஆலயம் தோன்றிய கால அத்திவாரங்களை அடிப்படையாகக் கொண்டு கட்டப்பட்டதாக அல்லது ஆலயத்தை விரிவுபடுத்த பிற்காலத்தில் சீமேந்து கொண்டு கட்டப்பட்ட ஆலய பாகங்களாக இருக்கலாம் எனக் கூறமுடியும்.

இவ்வாலயத்தின் தோற்றகாலத்தை உறுதியாகக் கூறக்கூடிய கல்வெட்டுக்களோ விக்கிரகங்களோ இதுவரை கிடைக்கவில்லை.

ஆலயத்தின் கர்பக்கிரகம், அந்தராளம் என்பவற்றிற்கு உள் நுளைய முடியாதவாறு பெரிய ஆலமர வேர்கள் காணப்படுகின்றன. அதற்குள் கொடிய விசப்பாம்புகள் குடியிருப்பதற்குரிய தடயங்கள் பரவலாகக் காணப்படுகின்றன.

இதனால் அச்சமின்றி அக்கட்டிடப் பகுதிகளுக்குச் சென்று ஆய்வினை மேற்கொள்ள முடியவில்லை.

இருப்பினும் வெளியில் இருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்களைக் கொண்டு கர்பக்கிரகத்தில் தெய்வ விக்கிரகங்களை வைப்பதற்கு பயன்படுத்தப்பட்ட பீடம் முழுமையாக சிதைவடைந்துள்ளமை தெரிகின்றது.

அவ்விடம் ஆழமாகத் தோண்டப்பட்டு பீடம் இருந்த இடம் பெரும் குழியாகக் காணப்படுகின்றது.

பீடத்தின் பின்பக்கச் சுவரில் இருக்கும் திருவாசி புகைபடர்ந்த நிலையில் அதன் கலைவடிவங்கள், தெளிவற்றுக் காணப்படுகின்றன.

இருப்பினும் எடுக்கப்பட்ட புகைப்படங்களைக் கொண்டு இவ்வாலயம் மிகப் பழமையானது என்பதை உறுதிப்படுத்த முடிகிறது.

அவற்றுள் கர்பக்கிரகத்தின் மேற்பக்கச் சுவரில் குறுக்காகவைக்கப்பட்ட நான்கு கற்பலகைகள் மீது மேல் நோக்கி வட்டமாக இரு தளங்களில் கட்டப்பட்ட விமானத்தின் அமைப்பு, விமானம் அமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட செங்கற்களின் அமைப்பும் அவற்றின் நீள அகலங்கள், கர்பக்கிரம், அந்தராளம் என்பவற்றின் வடிவமைப்பு, அவற்றின் நீள, அகலங்கள், வாசற்பகுதிகளில் அமைக்கப்பட்ட அகலமான கற்தூண்கள் என்பன 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பொலநறுவை, திருமங்களாய் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட சோழர் கால ஆலயங்களை நினைவுபடுத்துவதாக உள்ளன.

நாட்டில் எதிர் காலத்தில் தொல்லியல் திணைக்கள அனுமதியுடன் இவ்வாலயப் பகுதியில் விரிவான தொல்லியல் அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட்டால் இந்த ஆலயத்தின் தோற்றகாலம், அதன் கலைமரபுகள், வழிபடப்பட்ட தெய்வங்கள், கால ரீதியான ஆலய வளர்ச்சி, மாற்றம், ஆலயத்திற்கு சொந்தமாக இருந்த அசையும், அசையாத சொத்துக்கள், ஆலயத்தைப் பராமரித்த மக்கள், வழிபாட்டு மரபுகள் தொடர்பான பல உண்மைகள் வெளிச்சத்திற்கு வரும் என்பதில் ஐயமில்லை. என அவர் தெரிவித்துள்ளார்.



இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல 527 காங்கேசன்துறை சாலையிலுள்ள அகரவ் பப்ளிசிங் ஹவுஸ் பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி வெளியிடப்பட்டது.